## பத்தாம் வகுப்பு தமிழ் தேர்வு - 6

1. சதாவதானம் செய்து சாதனை படைத்தவர், சீராபுராணம் உரை எழுதியவர், வள்ளலாருக்கு உறுதுணையாக இருந்தவர் யார் ?
[A] உமறுப்புலவர் [B] குணங்குடி மஸ்தான்
[C] செய்குதம்பி பாவலர் [D] அனைவரும்

2. "உமறுப்புலவர்" பற்றி சரியானது
I. இயற்பெயர் - உமறு கத்தாப் என்று அழைக்கப்பட்டது
II. எட்டயபுரம் அரசவைக்கவிஞர் கடிகை முத்துப் புலவரிடம் கல்வி பயின்றவர்
III. சீதக்காதி வேண்டுகோளுக்கிணங்க வாழ்க்கைவரலாறு என்னும் பொருள் கொண்ட சீறாபுராணத்தை யாத்தவர்
IV. இவர் இயற்றிய பிற நூல்கள், நொண்டி நாடகம், முதுமொழி மாலை, சீதக்காதி திருமண வாழ்த்து
[A] I,II,III,IV [B] I, II, III
[C] I, IV [D] I, III, IV

3. சேது மன்னரின் அம்மை நோய் நீங்க இராச இராசேசுவரி மீது பஞ்சரத்தினமாலை பாடியவர், "சமரகவி" பாடுவதில் வல்லவர் ____________
[A] சவ்வாதுப்புலவர் [B] சர்க்கரைப்புலவர்
[C] வண்ணக்களஞ்சியப்புலவர் [D] அலியார் புலவர்

4. "சின்னச் சீறாப்புராணம்", "சித்திரக் கவித்திரட்டு", நூலை இயற்றியவர் யார் ?
[A] பனூ அகமது மரைக்காயர் [B] முகம்மது உசைன்
[C] கல்விக் களஞ்சியப் புலவர் [D] உமறுப்புலவர்

5. "கான்ஸ்டாண்டியஸ் ஜோசப் பெஸ்கி" என்பவர் யார் ?
[A] ராபர்-டி-நொபிலி [B] சீகன்பால்கு
[C] கால்டுவெல் [D] வீரமாமுனிவர்

6. "இராபர்-டி-நொபிலி" பற்றி உங்கள் கருத்து என்ன ?
I. உயர் குலத்தாரை கிருத்துவராக்கும் எண்ணத்தோடு இத்தாலியில் இருந்து வந்தவர்
II. பிராமணர்கள் போல் நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொண்டவர்
III. தனது இறுதி காலத்தை மதுரையிலும், மயிலாப் பூரிலும் வாழ்ந்து கழித்தார்
IV. நூல்கள் - ஞானபதேச காண்டம். ஆத்தும நிர்ணயம், ஏசுநாதர் சரித்திரம், நீதிச்சொல் முதலியனவாகும்
[A] I, III, IV [B] I, II, III
[C] II, III, IV [D] I, II, III, IV

7. இந்தியாவிலேயே (பொறையாற்றில்) காகிதத் தொழிற்சாலை அமைத்தப்பெருமை இவரைச்சாரும்
[A] வீரமாமுனிவர் [B] சீகன்பால்கு
[C] கால்டுவெல் [D] ஜி.யு.போப்

8. "வீரமாமுனிவர்" செய்த சீர்திருத்தத்தில் சரியானது
[I] நிறுத்தற் குறிகளைத் தமிழில் புகுத்தியவர்
[II] தமிழ் நீதி நூல்களைத் தமிழ்ச் செய்யுள்தொகை என்ற பெயரில் தொகுத்து வெளியிட்டார்
[III] 'வீரமாமுனிவர்' என்ற பட்டம் மதுரை தமிழ்ச் சங்கம் வழங்கி சிறப்பித்தது
[IV] இலக்கணப்பணிக்காக "செந்தமிழ்தேசிகர்" பட்டம்
[A] I, III, IV [B] I, III
[C] II, IV [D] I, II, III, IV

9. "திருக்குறளை" ஏசுநாதரின் இதய ஒளி என்றும் மலை உபதேசத்தின் எதிரொலி என்றும் போற்றியவர்
[A] வீரமாமுனிவர் [B] கால்டுவெல்
[C] ஜி.யு.போப் [D] H.A.கிருஷ்ணப்பிள்ளை

10. "அண்ணாவியார்" சிறப்பு பெயர் பெற்றவர்
[A] H.A.கிருஷ்ணப்பிள்ளை
[B] வேதநாயக சாத்திரியார்
[C] வேதநாயகம் பிள்ளை
[D] சாமுவேல் பிள்ளை

11. "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்"
[A] கால்டுவெல் [B] வீரமாமுனிவர்
[C] சவ்வாதுப்புலவர் [D] ஜி.யு.போப்

12. கீழ்கண்டநூல்கள் பற்றி தவறானது :
[A] சர்வசமயக் கீர்த்தனை - வேதநாயகம் பிள்ளை
[B] கருணாமிர்த சாகரம் - ஆபிரகாம் பண்டிதர்
[C] பில்கிரிம்ஸ் பிராகிரெஸ் - ஜான் பன்யன்
[D] வேதியர் ஒழுக்கம் - தைரியநாத சுவாமிகள்

13. வேதநாயகம் பிள்ளை இயற்றிய "நீதிநூல்" "நிகரில் ஞானச் சோதிநூல்" என்று பாராட்டியவர்
[A] கிருட்டிணப்பிள்ளை [B] பெ.சுந்தரம்பிள்ளை
[C] மீனாட்சி சுந்தரம் [D] இராமலிங்கம்

14. பொருத்துக :
[A தொன்னூல் விளக்கம் - வேதநாயகசாஸ்திரி
[B] கித்தேரியம்மன் அம்மானை - தைரியநாதர்
[C] திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்- கால்டுவெல்
[D] ஞானவுலா - வீரமாமுனிவர்
[A] 2 1 4 3 [B] 4 2 3 1
[C] 3 1 2 4 [D] 4 3 1 2

15. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க
[A] பூண், பாண், ஞான், ஊண்
[B] ஊண், ஞான், பாண், பூண்
[C] பாண், பூண், ஊண், ஞான்
[D] ஞான், ஊண், பூண், பாண்

ARIVU TRUST

16. "நவீன அகத்தியர்" - என்றுப் போற்றப்பட்டவர் (நவீன கம்பர் - மீனாட்சி சுந்தரம் பிள்ளை)
[A] சவ்வாதுப்புலவர் [B] சேகனாலெப்பை
[C] காசிம்புலவர் [D] உமறுப்புலவர்

17. "வீரமாமுனிவரின்" உரைநடை நூலைத் தேர்க
[A] ஞானக் கண்ணாடி, வாமன் கதைகள்
[B] சதுரகராதி, தொன்னூல் விளக்கம்
[C] வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம்
[D] தேம்பாவணி, கித்தேரியம்மாள் அம்மானை

18. "கால்டுவெல்லுக்கு" -இலக்கிய வேந்தர், வேத விற்பன்னர் என்னும் பட்டங்களை வழங்கியது ______
[A] எல்லீஸ் துரை [B] சீகன்பால்கு ஐயர்
[C] ராயல் ஏசியாட்டிக் சொசைட்டி [D] வீரமாமுனிவர்

19. தமிழ்க் கிறித்தவத் தொண்டர்களுள் தலைமையானவர் முனிசீப் நீதிபதி பதவி வகித்தவர் யார் ?
[A] கிருஷ்ணப்பிள்ளை [B] வேதநாயகசாத்திரி
[C] வேதநாயகம் பிள்ளை [D] சாமுவேல்பிள்ளை

20. கிருத்துவ கம்பர்H.A கிருஷ்ணப்பிள்ளை மொழிப் பெயர்த்த "இரட்சணியயாத்திரிகம்" எவ்வகை நூல் ___
[A] காப்பியம் [B] உரைநடை
[C] உரைநடை [D] தத்துவநூல்

21. "இளமையிலேயே ஓதாது உணர்ந்த சித்தர்"
[A] கிருஷ்ணப்பிள்ளை [B] இரேனியல் ஐயர்
[C] வேதநாயகம் பிள்ளை [D] வள்ளலார்

22. "வேதநாயக சாத்திரியார்" பின்வருவனவற்றுள் எது சரி
I. சிறப்புப் பெயர் "அண்ணாவியார்"
II. கிருத்துவப் பாடல்கள் பலாயிரம் இயற்றிச்சாத்திரியார் என்னும் பட்டம் பெற்றவர்
III. சரபோஜி மன்னரின் ஆஸ்தான கவிஞர்
IV. பட்டணப்பிரவேசம், ஆதியானந்தம், அறிவானந்தம், போன்ற நூல்களை இயற்றியுள்ளார்
[A] I,II,III,IV [B] I, III, IV
[C] II, III, IV [D] I, II, III

23. தேவாரமும் திவ்விய பிரபந்தமும் கலந்தாற் போன்று இதனைக் "கிருத்துவத் தேவாரம்" என்றும் அழைப்பு
[A] இரட்சணிய யாத்திரிகம் [B] இரட்சணிய மனோகரம்
[C] இரட்சணியக் குறள் [D] இரட்சணிய சரித்திரம்

24. "கருணாமிருத சாகரம்"-இயற்றியவர் "அபிரகாம் பண்டிதர்" இது எவ்வகை நூல் எனத் தேர்க ________
[A] தர்க்க நூல் [B] காப்பியம்
[C] நாடக நூல் [D] இசை நூல்

25. பின்வருவனவற்றுள் தவறானதைத் தேர்க "வள்ளலார்"
[A] இவரது வழிபாட்டு கடவுள் - முருகன்
[B] இவரது மந்திரம் - அருட்பெருஞ்ஜோதி
[C] இவரது கோட்பாடு - தவக்கோளம்
[D] இவரது கொள்கை - ஜீவகாருண்யம்

26. "வள்ளலார்" இயற்றாத நூலைத் தேர்க
[A] சிவநேச வெண்பா [B] மகாதேவ மாலை
[C] பராபரன் மாலை [D] இங்கிதமாலை

27. H.A.கிருஷ்ணப்பிள்ளை எழுதாத ஒன்றைத் தேர்க !
[A] இலக்கண சூடாமணி [B] ஜெபமாலை
[C] கிருத்தவரான வரலாறு [D] திரு அகவல்

28. தொல்காப்பியத்தையும் நன்னூலையும் ஒப்பிடும் நூல் "தொல்காப்பிய நன்னூல்" எழுதி இயற்றியவர் யார்
[A] தொல்காப்பியர் [B] பவணந்திமுனிவர்
[C] வேதநாயகம் பிள்ளை [D] சாமுவேல்பிள்ளை

29. ஐரோப்பியர்களுக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர்களில் தவறான ஒன்றைத் தேர்க
[A] சீகன் பால்கு ஐயர் - எஸ்.எம்.நடேசசாஸ்திரி
[B] எல்லீஸ் துரை - இராமச்சந்திரக் கவிராயர்
[C] போப் ஐயர் - இராமானுஜ கவிராயர்
[D] வீரமாமுனிவர் - சுப்ரதீப கவிராயர்

30. சந்திப்பிழையற்றச் சொல்லைத் தேர்க
[A] தாயைப் போல பிள்ளை நூலை போல சேலை
[B] தாயைப் போலப் பிள்ளை நூலை போல சேலை
[C] தாயைப் போல பிள்ளை நூலை போலச் சேலை
[D] தாயைப் போலப் பிள்ளை நூலைப் போலச் சேலை

31. கீழ்காணும் தொடர்களில் தமிழ்ச்சொற்றொடரைத்தேர்க
[A] ரோடு ரூல்ஸ் ஃபாலோ பண்ணனும்
[B] ப்யூர் டமில்ல பேசணும்னு நான் டிரை பன்றேன்
[C] எங்கள் குடும்பம் சிறிய குடும்பம்
[D] ஸ்விம்மிங் ஒரு ஹெல்த்தி எக்ஸர்சைஸ்

32. கீழ்காணும் தொடர்களில் கொச்சைச்சொற்களை நீக்குக
[A] காத்தாடி வுட்ட மாஞ்சா கவுறு கழுத்த அறுக்கும்
[B] விடிகால ஏந்திருச்சி வெள்ளாம பாக்க போனான்
[C] நெல்லுச்சோறு வவுத்துக்கு நோவு தராது
[D] வானம் பார்த்த பூமியில் மழை பெய்து நாளாகுது

33. பின்வருவனவற்றுள் "காவியத் தலைவர்கள்" யார் ?
[A] ஔவையார், ஆண்டாள்
[B] கோப்பெருந்தேவி, மங்கையர்கரசியார்
[C] காரைக்கால் அம்மையார், ஒக்கூர் மாசாத்தியார்
[D] கண்ணகி, மணிமேகலை

ARIVU TRUST

**34.** பொருத்துக :
[A] கழை - பறவையின் மூக்கு
[B] அளை - காற்று
[C] அலகு - புற்று
[D] வளி - மூங்கில்
[A] 4 3 2 1 [B] 4 2 3 1
[C] 2 3 4 1 [D] 4 3 1 2

**35.** துறவுக்கும் தொண்டுக்கும் எடுத்துக்காட்டாக இருந்தவர் ____________
[A] ஔவையார் [B] ஆண்டாள்
[C] கண்ணகி [D] மணிமேகலை

**36.** "அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித் தினிநட் டனரே கல்லும்" நூலைத் தேர்க
[A] தொல்காப்பியம் [B] அகநானூறு
[C] மும்மணிக்கோவை [D] புறநானூறு

**37.** பின்வருவனவற்றுள் ஒலி வேறுபாட்டில் தவறானது ?
I. பரி - குதிரை, பறி - வழிப்பறி
II. தினை - (தாவரவகை) தானியவகை,திணை-ஒழுக்கம்
III. முந்நாள் - முந்தையநாள், முன்னாள் - மூன்று நாள்
IV. ஊண் - உணவு, ஊன் - நிணம்
[A] I [B] II [C] III [D] IV

**38.** பின்வருவனவற்றுள் பொருந்த ஒன்று
[A] சித்தார்த்தரை புத்தராக்கியது - பண்பு
[B] இந்து வேதங்களுள் மிகவும் பழமையானது - ரிக்
[C] சிவத்தை அன்பு என்று கூறியவர் - திருமூலர்
[D] பாசப் பழிமுதல் பறிப்பார் போல - சேக்கிழார்

**39.** ஒரு வேலையும் செய்ய வேண்டிய நிலையில் இல்லை, எப்போதும் சும்மா இருக்கிறான்; இதுவும் ஒய்வு அல்ல என்று அண்ணா கூறுவது ________
[A] கொடுமை [B] சோம்பல்
[C] ஒய்யாரம் [D] மாமருந்து

**40.** கோவலன் குடிமக்களின் ஒருவன் ; மாதவி பரத்தையில் ஒருத்தி, இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே _______
[A] சிலப்பதிகாரம் [B] மணிமேகலை
[C] கண்ணகி புரட்சி காப்பியம் [D] சீவகசிந்தாமணி

**41.** பொருத்துக :
[A] கிருத்துவக் கம்பன் (1) கிருஷ்ண பிள்ளை
[B] மருள் நீக்கியார் (2) புத்தமித்திரர்
[C] பெரியாழ்வார் வளர்ப்பு மகள் (3) அப்பர்
[D] வீரசோழியம் பாடியவர் (4) ஆண்டாள்
[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 2 1 [D] 1 2 3 4

**42.** "தேவா நின்கழல் சேவிக்க வந்தனென் நாவாய் வேட்டுவன் நாயடியேன்" என்பது யாரைக் குறிக்கிறது
[A] இராமன் [B] அனுமன்
[C] சடாயு [D] குகன்

**43.** பொருத்துக :
[A] வினைப்பிணி (1) ஐந்தாம் வேற்றுமை
[B] வெண்குழை (2) வினைத்தொகை
[C] கொய்மலர் (3) உருவகம்
[D] வான்மழை (4) பண்புத்தொகை
[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 2 1 [D] 1 2 3 4

**44.** சேரன் செங்குட்டுவனானவன் கண்ணகிக்குச் சிலை கொணர்தற்பொருட்டு ___ சூடி வடதிசைக்கு சென்றான்
[A] வாகை [B] வஞ்சி
[C] உழிஞ்சை [D] நொச்சி

**45.** வெண்ணிப் பறந்தலை என்னும் போர்க்களத்தில் சோழன் கரிகாலனோடு போர் புரிந்தவன் யார் _____
[A] செங்குட்டுவன் [B] பெருஞ்சேரலாதன்
[C] நெடுமாறன் [D] நற்சேனை

**46.** தமிழ் மாதின் இனிய உயர்நிலை ____________ தமிழ் மொழியின் உபநிடதம் ______________
[A] தாயுமானவர் திருப்பாடல் திரட்டு/தொல்காப்பியம்
[B] திருக்குறள் / சிலப்பதிகாரம்
[C] திருக்குறள்/ தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
[D] ஔவையார் திருப்பாடல் திரட்டு/ திருக்குறள்

**47.** அறத்துப்பாலின் கண்ணமைந்த இயல்கள் ....
[A] அரசியல், அங்கவியல், ஒழிபியல்
[B] பாயிரவியல், இல்லறவியல்,துறவறவியல்,ஊழியல்
[C] பாயிரவியல், இல்லறவியல்,துறவறவியல்
[D] களவியல், கற்பியல்

**48.** பகுபத உருப்பிலக்கனத்தில் சரியானது எது ?
[A] இறந்தகால இடைநிலை - கிறு,கின்று,ஆநின்று
[B] நிகழ்கால இடைநிலை - ப்,வ்
[C] எதிர்கால இடைநிலை - த்,ட்,ற்,இன்
[D] எதிர்மறை இடைநிலைகள் - ஆ,அல்,இல்

**49.** சரியானதைத் தேர்க :
[I] சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் ............
[II] மீ.சு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் ...................
[III] வெஸ்லி பள்ளியில் படித்தவர் ..............................
[A] திரு.வி.க / முடியரசன் / பாரதிதாசன்
[B] திரு.வி.க / பாரதியார் / முடியரசன்
[C] பாரதியார் / முடியரசன் / திரு.வி.க
[D] பாரதிதாசன் / முடியரசன் / திரு.வி.க

ARIVU TRUST

50. பின்வருவனவற்றுள் சரியானதைத் தேர்க

| அலகு | அளகு |
|---|---|
| [A] கவின் | - மூங்கில் |
| [B] மூக்கு | - பெண் மயில் |
| [C] உள்ளம் | - நெருப்பு |
| [D] பறவை | - உள்ளம் |

51. பொருத்துக :

| | |
|---|---|
| [A] மருதம் | - அம்மூவனார் |
| [B] நெய்தல் | - ஓரம்போகியார் |
| [C] குறிஞ்சி | - பேயனார் |
| [D] பாலை | - ஓதலாந்தையார் |
| [E] முல்லை | - கபிலர் |

[A] 2 1 4 3 5
[B] 5 4 2 3 1
[C] 2 1 5 4 3
[D] 5 4 3 1 2

52. "ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை" இப்பாடலடியில் அமைந்துள்ளவாறு பின்வருவன வற்றுள் எது தவறானது ?
[A] சீர் மோனை அமைந்துள்ளது
[B] சீர் முரண் அமைந்துள்ளது
[C] சீர் இயைபு அமைந்துள்ளது
[D] கீழ்கதுவாய் மோனை அமைந்துள்ளது

53. கீழ்காணும் விடைகளில் எது சரியானது ?
[A] சே - சோலை [B] சோ - சிவப்பு
[C] மா - விலங்கு [D] கா - மதில்

54. 'ஷெல்லிதாசன்'என்று தன்னைக் கூறிக் கொண்டவர் ?
[A] சுப்ரமணிய பாரதியார்
[B] சுத்தானந்த பாரதியார்
[C] சோமசுந்தர பாரதியார்
[D] சுப்ரமணிய சிவா

55. 'தேம்பாவணி'நூலில் உள்ள படலங்களின் எண்ணிக்கை
[A] 39 படலங்கள் [B] 30 படலங்கள்
[C] 32 படலங்கள் [D] 36 படலங்கள்

56. தம்மை நாயகியாகக் கற்பனை செய்து நாரையைத் தூது விட்ட ஆழ்வார் யார் ?
[A] பொய்கையாழ்வார் [B] நம்மாழ்வார்
[C] குலசேகராழ்வார் [D] பெரியாழ்வார்

57. மணிமிடைபவளத்தில் உள்ள பாக்கள் எண்ணிக்கை
[A] 180 [B] 120
[C] 100 [D] 400

58. அகநானூறு திணைகளில் பொருந்தாதது :

| | |
|---|---|
| [A] பாலைத்திணை | - 1, 2, 5 |
| [B] குறிஞ்சித்திணை | - 2, 8 |
| [C] முல்லைத்திணை | - 4, 14 |
| [D] நெயதல்த்திணை | - 10, 20 |

59. பொருத்துக :

| | |
|---|---|
| [A] யாழின் ஓர் உறுப்பு | - பத்தர் |
| [B] யாழ் நரம்பை இழுத்துக்கட்டும் கருவி | - மாடகம் |
| [C] அகன்ற கண்களை உடையவள் | - தடங்கண்ணால் |
| [D] வீணாபதி | - நெடுங்கண்ணால் |
| [E] இவுளி | - புரவி |

[A] 2 1 4 3 5
[B] 1 2 3 4 5
[C] 2 1 4 3 5
[D] 2 3 4 5 1

60. பெண்பாற் புலவர்களுள் மிகுதியாகப் பாடல்களை பாடியவர் ஔவையார், எந்த நூலில் உள்ளது ______
[A] அகநானூறு / புறநானூறு / கலித்தொகை
[B] திருப்பாவை / புறநானூறு / திருவள்ளுவமாலை
[C] வாகுண்டாம் / கொன்றைவேந்தன் / நல்வழி
[D] நற்றிணை / குறுந்தொகை / புறநானூறு

61. நாமகள் இலம்பகம் முதலாக முத்தியிலம்பகம் ஈறாகப் (13) இலம்பகங்களை கொண்டுள்ள நூல்
[A] சிலப்பதிகாரம் [B] பாஞ்சாலிசபதம்
[C] குண்டலகேசி [D] சீவகசிந்தாமணி

62. இறைவனின் திருத்தூதர்"நபிகள் நாயகம்"- திருமணம் எந்த காண்டத்தில் கூறப்பட்டுள்ளது
[A] நுபுவ்வத்துக் காண்டம்
[B] ஹிஜ்ரத்துக்காண்டம்
[C] விலாதத்துக் காண்டம்
[D] செலவியற்காண்டம்

63. முதுமொழிமாலை (உமறுப்புலவர்) பாடல்கள் ______
[A] 80 பாடல்கள்
[B] 81 பாடல்கள்
[C] 5027 பாடல்கள்
[D] 5818 பாடல்கள்

64. மூத்த திருநாவுக்கரசனுக்கு பாம்பு எங்கு தீண்டியது அபூபக்கருக்கு பாம்பு எங்கு தீண்டியது ______
[A] உள்ளங்கையில் / உள்ளங்காலில்
[B] உள்ளங்காலில் / உள்ளங்கையில்
[C] விரல்பகுதியில் / கால்விரலில்
[D] அனைத்தும் சரி

ARIVU TRUST

65. பொருத்துக :
[A] தினந்தினம் (1) உவமைத்தொகை
[B] வன்காயம் (2) பண்புத்தொகை
[C] குக்குவென (3) அடுக்குத்தொடர்
[D] மலர்க்கால் (4) இரட்டைக்கிளவி
[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 2 4 1 [D] 1 2 3 4

66. தமிழ்நாட்டின் "ஜேம்ஸ் கட்லி சேஸ்"-
[A] சுஜாதா [B] வேங்கடரமணி
[C] வை.மு.கோதைநாயகி [D] கல்கி

67. பொருந்தாத ஒன்று :
[A] சமுதாய வீதி - நா. பாரத்தசாரதி
[B] கரித்துண்டு - அண்ணாதுரை
[C] துளசிமாடம் - நா. பாரத்தசாரதி
[D] வாடாமலர் - மு.வரதராசனார்

68. "கலைக்கரசு"- என்று போற்றப்படும் கலை எது ?
[A] நாடகம் [B] நாட்டியம்
[C] பொம்மலாட்டம் [D] கூத்து

69. நூல் நூலாசிரியர்களில் பொருந்தாதது ;
[A] டம்பாச்சாரி விலாசம் - காசி விசுவநாதன்
[B] நந்தனார் சரித்திரம் - கோபாலகிருஷ்ண பாரதி
[C] மண்ணியல் சிறுதேர் - கதிரேசஞ்செட்டியார்
[D] அணிச்ச அடி - மீனாட்சி சுந்தரம்பிள்ளை

70. திருமிழிசையாழ்வார் மாணாக்கர்
[A] நம்மாழ்வார் [B] பெரியாழ்வார்
[C] கணிகண்ணன் [D] பிசிராந்தையார்

71. கண்ணனுக்கு நஞ்சு கலந்த பால் கொடுக்க கம்சனால் அனுப்பப்பட்டவள் யார் ?
[A] அவுணன் [B] இரணியன்
[C] ஒள்ளிழையார் [D] பூதனை

72. கலிங்கத்துப்பரணி பற்றி சரியானது எது / எவை
[A] ஆனை ஆயிரம் அமரிடை வென்ற - பரணி
[B] தென்தமிழ் தெய்வப் பரணி - சொக்கநாதர்
[C] பரணிக்கோர் சயங்கொண்டார் - ஒட்டக்கூத்தர்
[D] எனக்கு மிகவும் விருப்பமானது பரணி - அண்ணா

73. கலிங்கத்துப்பரணியில் காளிக்கு கூளி கூறிய கதையில் எத்தனை தாழிசைகள் உள்ளது ________
[A] 509 தாழிசைகள் [B] 599 தாழிசைகள்
[C] 5 தாழிசைகள் [D] 7 தாழிசைகள்

74. கலிங்கத்துப்பரணி யாரைப் புகழ்ந்து பாடப்பட்டது
[A] முதல் குலோத்துங்க சோழன்
[B] இரண்டாம் குலோத்துங்க சோழன்
[C] கருணாகரத் தொண்டைமான்
[D] கலிங்கத்து காரவேலன்

75. வரலாற்றுப் புலவர் பரணர் ; <u>பாணர் என்பவர் யார்</u> ?
[A] குலோத்துங்க சோழன் படைத்தளபதி
[B] ஆடிப்பாடி வாழும் இசை வாணர்
[C] கருணாகரத் தொண்டைமான் நண்பர்
[D] ஒட்டக்கூத்தர்

76. பொருந்தாத ஒன்றை தேர்க :
[A] சிலை - வில்
[B] வயமா - காகம்
[C] அபயன் - முதற்குலோத்துங்கன்
[D] கலிங்கம் - ஒரிசா

77. தஞ்சை வேதநாயக சாத்திரியார் எழுதாத நூல் எவை
[A] திருக்கைலாயஞானவுலா
[B] ஞானத்தச்சன்
[C] பெத்தலகேம் குறவஞ்சி
[D] ஆரணாதிந்தம்

78. 96 வகை சிற்றிலக்கியங்களுள் பொருந்தாதது
[A] பெத்தலகேம் குறவஞ்சி
[B] முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
[C] அழகர் கிள்ளைவிடு தூது
[D] மனோன்மணீயம்

79. தூதின் இலக்கணம் கூறும் நூல்
[A] பன்னிருபாட்டியல்
[B] இலக்கண விளக்கம்
[C] யாப்பெருங்கலக்காரிகை
[D] புறப்பொருள் வெண்பாமாலை

80. மு.வரதராசனார் படைப்புகளில் பொருந்தாதது
[A] கரித்துண்டு
[B] பார்வதி பி.ஏ
[C] கள்ளோ ? காவியமோ ?
[D] வாடாமலர்

81. மரபுப் பிழையற்ற தொடர் எது ?
[A] மயில் கூவியது ; குயில் குழறியது
[B] குயில் கூவியது ; மயில் முழங்கியது
[C] குயில் கத்தியது ; மயில் அலரியது
[D] குயில் கூவியது ; மயில் அகவியது

ARIVU TRUST

**82.** பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது ?
[A] பெற்றோர் ஆசிரியர்கழகத்தில் மாணவர்கள் அங்கத்தினர்
[B] தேர்வு நேரத்தில் அந்நியர் நுழையக் கூடாது
[C] அலுவலகத்தில் உத்தரவு பெற்று உள்ளே வரவும்
[D] அலுவலகத்தில் கையூட்டு வாங்கக் கூடாது

**83.** கீழ்காணும் 'வல்லினம் மிகா இடம்' குறித்த இலக்கண கூற்றில் பிழையான கூற்று எது ?
[A] வினைத்தொகையில் வல்லினம் மிகாது
[B] உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது
[C] இரண்டாம் வேற்றுமையில் வல்லினம் மிகாது
[D] நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகாது

**84.** "ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர் தாக்கற்குப் பேருந் தகைத்து"- எனும் குறளில் வள்ளுவர் எடுத்தாலும் உவமை எது
[A] வேங்கை [B] குதிரை
[C] நாய் [D] ஆட்டுக்கடா

**85.** 'நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்றது'-நூல்
[A] இரட்சணியயாத்ரீகம் [B] மனோன்மணீயம்
[C] ஆசியஜோதி [D] மிருச்சகடிகம்

**86.** "இசைப் பெரும் புலவர்"
[A] ரா.பி சேதுப்பிள்ளை [B] சபாபதி
[C] இராமலிங்கம் [D] மாரிமுத்தாப்பிள்ளை

**87.** "சென்னைப் பட்டினப்பிரவேசம்" நொண்டி நாடகம்
[A] H.A.கிருஷ்ணப்பிள்ளை
[B] சாமுவேல் பிள்ளை
[C] வேதநாயக சாத்திரியார்
[D] நல்லூர் ஞானபிரகாசர்

**88.** "நாமார்க்கும் குடியெல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்"
"நரகம்" - என்பதற்கு இலக்கணம் தருக
[A] முற்றும்மை [B] எண்ணும்மை
[C] இழிவு சிறப்பும்மை [D] காலப்பெயர்

**89.** முடியரசன் பற்றி தவறானது :
I.துரைராசுஎன்ற பெயரை முடியரசன் என மாற்றினார்
II.பெரியார் (ம) எம்.ஜி.ஆர் இடம் நெருங்கி பழகியவர்
III.பரம்பு மலை விழாவில் கவியரசு பட்டம் பெற்றார்
IV.சாகித்யஅகாதமி இவரது கவிதைகளை இந்தி, (ம) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது
[A] I [B] II
[C] III [D] IV

**90.** கீழ்கொடுக்கப்பட்டவற்றுள் 'பண்புத்தொகை'அல்லாதது
[A] மெல்லிதழ் [B] மென்குரல்
[C] நுண்டுளி [D] அருள்மொழி

**91.** கலைமகளின் அருளைப்பெற்று இந்துஸ்தானி கற்றவர்
[A] சுந்தரர் [B] தியாகராசர்
[C] அருணகிரியார் [D] குமரகுருபரர்

**92.** சமரச சன்மார்க்கச் சிந்தனை மிகுந்த பாடல் இயற்றுவதில் வல்லவர்
[A] வள்ளலார் [B] தாயுமானவர்
[C] காளமேகப்புலவர் [D] குமரகுருபரர்

**93.** குமரகுருபரர் படைப்பில் சரியானது எது ?
[A] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் [B] நீதிநெறிவிளக்கம்
[C] காசிக்கலம்பகம் [D] அனைத்தும்

**94.** (இரசூல்கம்சதேவ்) என்நாட்டைச் சேர்ந்தவர்
[A] கிரேக்ககவிஞர் [B] தமிழ்நாட்டு கவிஞர்
[C] இரஷ்ய கவிஞர் [D] அனைத்தும் தவறு

**95.** பாவேந்தரின் சாகித்ய அகாடமி பரிசு பெற்ற நூல்
[A] சேரதாண்டவம் [B] பிசிராந்தையார்
[C] சேரமான்காதலி [D] பாண்டியன்பரிசு

**96.** "வண்டையர் கோன்"
[A] கருணாகரதொண்டைமான் [B] திருமூலர்
[C] குலோத்துங்க சோழன் [D] குமரகுருபரர்

**97.** சாதி மறுப்புத் திருமணஞ் செய்தவர் _________ பெரியாரிடத்தும், அன்னாவிடம் நெருங்கி பழகியவர்....
[A] காத்தவராயன் [B] பாரதிதாசன்
[C] துரைராசு [D] சிற்பி

**98.** கிள்ளைவிடு தூதின் உள்ள கண்ணிகள் ___________
[A] 269 [B] 239
[C] 293 [D] 273

**99.** சதுர்_____ ரூபாயத்_____ கண்ணிகள் ______ ?
[A] பெயர்,பொருள்,தொகை,தொடை/நான்கு
[B] நான்கு/ நான்கு / இரண்டு
[C] நான்கு / இரண்டு / மூன்று
[D] நான்கு / இரண்டு / இருநூற்று முப்பத்தொன்பது

**100.** அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரைப்பண்டிதன் அழகிய மணவாளதாசர் கூற்றுப்படி இதில் (அஷ்டம்) என்பது
[A] நான்கு [B] பத்து
[C] ஒன்பது [D] எட்டு

ARIVU TRUST

விரைவில் "பனிரெண்டாம் வகுப்பு" தமிழ் பதிவேற்றம் செய்யப்படும் ________

## (11th STD – TAMIL - ANSWER KEY)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 C | 2 A | 3 A | 4 C | 5 D | 6 D | 7 B | 8 D | 9 C | 10 B |
| 11 A | 12 A | 13 C | 14 B | 15 B | 16 B | 17 A | 18 C | 19 C | 20 A |
| 21 D | 22 A | 23 B | 24 D | 25 C | 26 C | 27 B | 28 D | 29 A | 30 D |
| 31 C | 32 D | 33 D | 34 D | 35 D | 36 D | 37 C | 38 A | 39 C | 40 A |
| 41 B | 42 D | 43 c | 44 B | 45 B | 46 C | 47 B | 48 D | 49 C | 50 B |
| 51 C | 52 B | 53 C | 54 A | 55 D | 56 B | 57 A | 58 A | 59 B | 60 D |
| 61 D | 62 C | 63 A | 64 A | 65 C | 66 A | 67 B | 68 A | 69 D | 70 C |
| 71 D | 72 D | 73 C | 74 C | 75 B | 76 B | 77 A | 78 D | 79 B | 80 B |
| 81 D | 82 D | 83 D | 84 D | 85 B | 86 C | 87 C | 88 C | 89 B | 90 D |
| 91 D | 92 B | 93 D | 94 C | 95 B | 96 A | 97 C | 98 B | 99 B | 100 D |

ARIVU TRUST

ARIVU TRUST